## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) இந்திய வானியல் கழகத்தின் முதல் பெண் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A] பிரமிளா மேத்தா

B] கௌதமி கபூர்

C] ராதா ஷர்மா

D] gc அனுபமா

- ✓ டாக்டர் ஜி சி அனுபமா இந்திய வானியல் கழகத்தின் முதல் பெண் தலைவர் ஆவார். இந்தியாவில் உள்ள தொழில் சார்ந்த வானியல் நிபுணர்களை கொண்ட கழகம் இதுவாகும். ஆர்கே தியாகியை தொடர்ந்து இவர் இந்த பதவியில் நீடிக்கிறார்.
- ✓ இதற்கு முன்னதாக இவர் பெங்களூரைச் சேர்ந்த இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் **astrophysics** எனும் நிறுவனத்தில் டீன் மற்றும் மூத்த பேராசிரியராக பணியாற்றினார்.
- ✓ மேலும் இவர் சர்வதேச விஞ்ஞான குழுவில் இந்திய குழுமத்தின் தலைவராக செயல்படுகிறார். அந்த குழுமம் அமெரிக்காவில் உள்ள ஹவாய் தீவில் ஒரு பில்லியன் டாலர் செலவில் **Thirty meter telescope** தெர்ட்டி மீட்டர் டெலஸ்கோப் (30 மீட்டர் தொலைநோக்கியை உருவாக்கி வருகிறது.
- ✓ இந்த 30 மீட்டர் தொலைநோக்கி ஒரு சர்வதேச திட்டமாகும். கனடா,சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் **USA** யை சேர்ந்த அறிவியல் கழகங்கள் நிதி அளித்து வருகின்றன. இவர் சர்வதேச மாநாட்டில் சூப்பர் நோவா, **astrophysics** சம்பந்தமான பல்வேறு ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மேலும் லே- லடாக்கில் உள்ள ஹன்லே அப்சர்வேட்டரி மையத்தில் உள்ள ஹிமாலயன் தொலைநோக்கி திட்டத்தின் பொறுப்பு இயக்குனராகவும் உள்ளார்.
- ✓ இந்த லே தொலைநோக்கி உலகத்தில் மிக உயர்ந்த இடத்தில் உள்ள தொலைநோக்கி ஆகும். இதன் மூலம் அறிவியல் கழகத்திற்கு பயனுள்ள தகவல்கள் கிடைக்கப் பெறுகிறது.

2) 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தாய்மொழி தினத்தின் கருப்பொருள் என்ன? [2019 International Mother Language Day (IMLD)]

A] நீடித்த வளர்ச்சிக்கான மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழித்துவம்.

B] வளர்ச்சி, அமைதி மற்றும் சமரசத்திற்கு காரணமான உள்நாட்டு மொழிகள்.

**C]** நிலையான எதிர்காலத்தை நோக்கிய பன்மொழி கல்வி.

**D]** தரமான கல்வி கற்பித்தல் , மொழிகள் மற்றும் கற்றல் விளைவுகள்.

- ✓ கலாச்சார பன்முகத்தன்மை, மொழியியல் மற்றும் பன்மொழி துவத்தை போற்றும் விதமாக ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் **21**ம் தேதி சர்வதேச தாய்மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது. **2019** ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாய் "வளர்ச்சி, அமைதி மற்றும் சமரசத்திற்கு காரணமான உள்நாட்டு மொழிகள்" உள்ளது.
- ✓ இந்த உலகில் பேசப்படும் ஆறாயிரம் மொழிகளில் **43** சதவீத மொழிகள் அழியும் தருவாயில் உள்ளது.
- ✓ இவற்றில் சில நூறு மொழிகளுக்கே கல்வியிலும் பொதுவெளியிலும் மொழியியல் அந்தஸ்து கிடைத்துள்ளது.
- ✓ ஐக்கிய நாடுகளின் அறிக்கைப்படி ஒவ்வொரு இரண்டு வாரங்களிலும் ஒரு மொழி வழக்கொழிந்து போகிறது.
- ✓ யுனெஸ்கோ நிறுவனம் சர்வதேச தாய்மொழி தினத்தை கடந்த **20** ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகிறது.
- ✓ இதன் மூலம் மொழிகள் பன்முகத்தன்மையை பாதுகாப்பதுடன் தாய்மொழியின் மகத்துவத்தையும் உலகிற்கு எடுத்துரைக்கிறது.மேலும் தாய் மொழியின் மகத்துவத்தை பள்ளிகளிலிருந்து மாணவர்களுக்கு புகட்ட வேண்டும் எனக் கூறுகிறது.

**3)** கீழ்க்காணும் எந்த நட்பு நாடுகளில் "இந்தியாவின் திருவிழாக்கள்" என்ற நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது? **[The Festival of India]**

**A]** நேபாளம்

**B]** பங்களாதேஷ்

**C]** மியான்மார்

**D]** பூட்டான்

- ✓ ஒரு மாத காலம் நடக்கும் "இந்தியாவின் திருவிழாக்கள்" என்ற விழா நேபால் தலைநகரம் காத்மாண்டுவில் பிப்ரவரி **19** முதல் மார்ச் **21**ஆம் தேதி வரை நடந்துள்ளது.

- ✓ இந்தியா மற்றும் நேபாள நாடுகளுக்கு இடையே ஆன கலாச்சார ஒற்றுமைகளை பிரதிபலிக்கும் விதமாக உள்ள திருவிழாக்களை கொண்டாடுவதன் மூலம் அந்த நாட்டை சேர்ந்த இளம் தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் விதமாக இந்த திருவிழா கொண்டாடப்பட்டது.
- ✓ இதனை இந்திய தூதரகமும் சுவாமி விவேகானந்தா கலாச்சார மையமும் இணைந்து காத்மாண்டு மற்றும் பிற முக்கிய நகரங்களில் நடத்தியது.

**4) 2019 ஆம் ஆண்டிற்கான சர்வதேச விஷன் ஜீரோ மாநாடு எங்கு நடைபெற்றது? (Vision Zero Conference)**

**A]** டேராடூன்

**B]** மும்பை

**C]** சிம்லா

**D]** புதுடில்லி

- ✓ "தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மும்பையில் கடந்த பிப்ரவரி **18** முதல் **20**-ம் தேதி வரை சர்வதேச **vision zero** மாநாடு நடைபெற்றது.
- ✓ **The directorate general factory advice and Labour institute, IIT Bombay , German social accident insurance** , மின்சாரம், சுரங்கம், கட்டுமானம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு பிரிவுகளைக் கொண்ட **IISA** உடன் இணைந்து இந்த சர்வதேச மாநாடு நடத்தியது.
- ✓ இந்த மாநாடு **4** கொள்கைகளை கொண்டது

  **1)** மனித வாழ்க்கை பேச்சுவார்த்தைக்கு உட்பட்டது அல்ல

  **2)** மனிதன் தவறு செய்யக் கூடியவன்

  **3)** சகிப்புத்தன்மை என்பது மனித உடல் ரீதியான எதிர்ப்பின் அளவைப் பொருத்தது மற்றும்

  **4)** பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பான இடங்களை பெற மக்களுக்கு உரிமை உள்ளது.

- ✓ மேலும் இந்த மாநாடு ஆபத்தை குறைக்கவும் பாதுகாப்பை உறுதி செய்யவும் வேலை இடங்களில் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் விதமாக நடந்தேறியது.

winmeen.com

**5) எந்த மாநில காவல்துறை முதல் முறையாக மனிதனைப் போன்ற ரோபோ அதிகாரியை நியமித்துள்ளது?**

**A]** கர்நாடகா

**B]** கேரளா

**C]** தமிழ்நாடு

**D]** ஆந்திரப்பிரதேசம்

- ✓ கேரள மாநில காவல் துறையில் உலகின் மற்றும் இந்தியாவின் முதல் முறையாக மனிதனைப் போன்ற ரோபோ அதிகாரியை நியமித்து சாதனை படைத்துள்ளது.
- ✓ இதன் பெயர் **(KP- Bot)** கேபி போர்ட் ஆகும்.
- ✓ போலீஸ் நிலையத்தின் வரவேற்பறையில் உள்ள இந்த ரோபோவானது மனிதத் தவறுகளைக் குறைக்கும் விதமாக தகவல்களை சேகரிக்கவும் வரவேற்பறை நிர்வாகத்திலும் செயல்பட்டு வருகிறது எனினும் இந்த ரோபோவின் வருகையால் எந்த ஒரு மனிதவளமும் குறைக்கப்படவில்லை.

**6) ஸ்பெயின் நாட்டின் உயரிய விருதான grand cross of order of civil merit என்ற விருதை பெற்ற இந்திய அரசியல் பிரமுகர் யார்?**

**A]** சுமித்ரா மகாஜன்

**B]** நரேந்திர மோடி

**C]** சுஷ்மா சுவராஜ்

**D]** வெங்கைய நாயுடு

- ✓ மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜுக்கு ஸ்பெயின் அரசாங்கம் அந்நாட்டின் உயரிய விருதான **grand cross of order of civil merit** யை வழங்கியது.
- ✓ ஏப்ரல் **2015** ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கத்தில் சிக்கி தவித்த **71** ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்களை மீட்ட இந்தியாவின் "மைத்திரி" என்ற சேவையை பாராட்டி ஸ்பெயின் அரசாங்கம் இந்த விருதினை நன்றி செலுத்தும் விதமாக சுஷ்மா சுவராஜ் அவர்களுக்கு அளித்துள்ளது.

- ✓ மேலும் இந்த நிலநடுக்கத்தில் **9,000** பேர் உயிர் இழந்ததோடு **22000** க்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

**7) KALIA Chhatra Bruti** என்ற கல்வி உதவி தொகையை எந்த மாநில அரசாங்கம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியது?

**A]** அசாம்

**B]** பஞ்சாப்

**C]** ஜார்கண்ட்

**D]** ஒடிசா

- ✓ **KALIA** திட்டத்தின் பயனாளிகளின் குழந்தைகளுள் பள்ளி மற்றும் தொழிற் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு உதவும் விதமாக **KALIA Chhatra Bruti** என்ற கல்வி உதவித்தொகையை ஒடிஷா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் அவர்கள் தலைமைச் செயலகத்தில் அறிமுகப்படுத்தினார்.
- ✓ **KALIA ( Krushak Assistance for livelihood and income augmentation)**
- ✓ என்னும் திட்டம் விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்டதாகும். இந்தத் திட்டத்தின் மூலமாக கடவுள் ஜகந்நாத் அவரின் பெயரால் சிறு மற்றும் விளிம்புநிலை விவசாயிகளுக்கு பயிரிட உதவியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் **10,000** ரூபாயை உதவித்தொகையாக அளிக்கிறது.
- ✓ மேலும் இவர்கள் **2018-19** மற்றும் **2021- 22** ஆம் ஆண்டுகளில் காரீப் மற்றும் ராபி பருவ காலத்தில் ஐந்து அறுவடை காலங்கள் உட்பட **5,000** ரூபாய் உதவித் தொகையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளிக்கப்படும்.
- ✓ இந்த உதவி தொகையானது நில உரிமையாளர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
- ✓ மாறாக நிலமற்ற விவசாயிகளுக்கு ஆடு மாடு மேய்ப்பதற்கும் வாத்துப் பண்ணை, மீன் பண்ணை, காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்றவற்றை ஊக்குவிக்கும் விதமாக ரூபாய் **12500** வழங்கப்படும்.

**8)** புதிய **300000** விண்மீன் திரள்களை **(Galaxy)** கண்டறிய எந்தத் தொலைநோக்கி உதவியது?

**A] LOFAR**

**B] Hubble**

C] Spitzer space

D] Euclid

- ✓ **18** நாடுகளை சேர்ந்த இருநூற்றுக்கும் மேற்பட்ட வானியல் அறிஞர்களை கொண்டு வான வெளியில் மேற்கொண்ட ஆய்வின் முதல்கட்ட அறிக்கையை வானியல் மற்றும் **astrophysics** என்ற இதழில் வெளியிட்டது.
- ✓ இந்த ஆய்விற்கு லோபர் எனப்படும் தொலைநோக்கி உபயோகப்படுத்தப்பட்டது.
- ✓ **LOFAR ( Low frequency array).**
- ✓ வட அரைக்கோள பகுதியில் குறைந்த ரேடியோ அலைகளை பயன்படுத்தி நடத்திய ஆய்வின் மூலம் மறைந்திருந்த விண்மீன் திரள்களை கண்டறிய முடிந்தது.
- ✓ இந்த ஆய்வின் மூலம் பிரபஞ்சத்தைப் பற்றிய பல ஆழ்ந்த ரகசியங்களுக்கான விடைகளை கண்டறிய முடியும் என நம்பப்படுகிறது. மேலும் கருந்துளை எனப்படும் **Black holes** பற்றிய ஆய்வுகளுக்கும் விண்மீன் திரள்களை பற்றிய மேற்படி ஆய்வுகளுக்கும் இந்த முதற்கட்ட ஆய்வு வழிவகுக்கும்.
- ✓ நெதர்லாந்தில் உள்ள **ASTRON** நிறுவனத்தால் லோபர் தொலைநோக்கி இயக்கப்பட்டு வருகிறது. மேலும் உலகின் தலைசிறந்த தொலைநோக்கிகளில் இதுவும் ஒன்றாக கருதப்படுகிறது.
- ✓ உலகின் ஏழு நாடுகளில் நிறுவப்பட்ட ரேடியோ ஆண்டனாவினால் இணைக்கப்பட்ட இந்த தொலைநோக்கியானது **1300** கிலோ மீட்டர் விட்டம் கொண்ட ஒரு செயற்கைக்கோள் தளத்திற்கு சமமாகும்.
- ✓ பிற ஆப்டிகல் கருவிகளால் கண்டறிய முடியாத ஒளி கற்றை கூட இந்த தொலைநோக்கியால் காண இயலும்.
- ✓ இந்த அரிய ரேடியோ அலைக்கற்றையை பயன்படுத்தி இரண்டு பெரிய வானியல் பொருட்கள் மோதிக்கொள்ளும் போது வெளிப்படும் கதிர்வீச்சை கூட பதிவு செய்ய இயலும்.

**9) Space Policy Directive-4** (விண்வெளி கொள்கை உத்தரவு- **4)** எந்த நாட்டுடன் தொடர்புடையது?

A] பிரான்ஸ்

**B] US**

C] ஜெர்மனி

D] ரஷ்யா

- ✓ பிரதமர் டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் விண்வெளி கொள்கை உத்தரவு-4ல் கையெழுத்திட்டார்.
- ✓ இதன் மூலம் அமெரிக்காவின் விண்வெளித்துறை அந்நாட்டின் விமானப்படையில் ஒரு ராணுவ அங்கமாக மாற்றப்படுகிறது.
- ✓ இதன் மூலம் விண்வெளியில் அமெரிக்காவின் பங்கு அதிகரிப்பதோடு விண்வெளியில் நிகழும் போர் மற்றும் போர் தாக்குதலுக்கான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பினை செய்து கொள்ள இயலும்.
- ✓ இந்தப் படையானது அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையம் மற்றும் விண்வெளி தொடர்பான அனைத்தையும் பாதுகாக்கும் விதமாக நிர்வகிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். இது சர்வதேச விண்வெளி சட்டத்திற்கு உட்பட்டே நிகழ்கிறது.
- ✓ இதுவரையிலும் அந்நாட்டின் விமானப்படையே விண்வெளி பாதுகாப்பிற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**10) The words in the garden** (தோட்டத்தின் வார்த்தைகள்) என்ற காந்திய கொள்கையின் அடிப்படையில் அமைந்த விழா எங்கே கொண்டாடப்பட்டது?

**A]** சிம்லா

**B]** அகமதாபாத்

**C]** புதுடில்லி

**D]** காந்திநகர்

- ✓ காந்திய கொள்கைகளை போற்றும் விதமாக மூன்றாவது "தோட்டத்தின் வார்த்தைகள்" **(The words in the garden)** என்ற விழா பிப்ரவரி மாதம் **22**ஆம் தேதி புதுடெல்லியில் நடந்தது.
- ✓ "பாபு கீ தில்லி" என்பது இந்த விழாவின் கருப்பொருளாகும்.
- ✓ மூன்று நாள் விழாவான இந்த நிகழ்வு டெல்லி மாநகரத்தால் உருவாக்கப்பட்டு இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கண்டுபிடிப்புகளையும் கற்பனைகளையும் யோசனைகளையும் நினைவு கூறும் விதமாகவும் மகாத்மா காந்தியின் **150** வது பிறந்த நாளை நினைவு கூறும் விதமாகவும் அவரது நாடகங்கள், எழுத்துக்கள், புத்தகங்கள், ஒப்புவித்தல் போட்டி முதலியவை நடைபெற்றது.
- ✓ இந்த விழாவின் முக்கிய நிகழ்வுகளான எம் கே ரெய்னாவின் "இன்னும் சிறிது நேரம் தங்கி இருங்கள்" என்ற நாடகமும் மகாத்மா காந்தியை பற்றிய கவிதை ஒப்புவித்தல் போட்டிகளும் முகமது பருக்

அவர்களின் "காந்தியின் இறுதி பயணம்" என்ற கதையும் மதுப் பளுக் அவர்களின் "ஆசிரமம் பஜனவள்ளி" என்ற கதையும் அரங்கேற்றப்பட்டது. இந்த விழாவிற்கான அனுமதி இலவசம்.

- ✓ மேலும் இலக்கியம்,கலை மற்றும் சமூக துறைகளை சேர்ந்த ஜாம்பவான்கள் இதில் பங்கு பெற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்தி எழுத்தாளர் அசோக் வாஜ்பாய் அவர்களின் யோசனையால் இந்த விழா தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது.

winmeen.com